தாத்திஷரில் சிறந்த
யானை மார்க்
ஓடுகளையே பாவியுங்கள்
மூ. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

மக்கள் 8

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

மலர் ..
யாழ்ப்பாணம்

வைகாசி 4
சனிக்கிழமை

றஜப் 2

இதழ் 97
17-5-80

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-5-17
PERIODICALS DIVISION
Library

புதிய சுமராக்கள்
பிளாஸ் முதலியன
விற்பனைக்கு
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை
(புதிய கட்டிடம்
உள்பக்கம்)
யாழ்ப்பாணம்
போன்: 252

# யாழ். பல்கலைக்கழக மாணவர் விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்

## கவுன்சில் கூட்டம் முற்றுகை; தபால்நிலைய திறப்புவிழாவுக்கும் செல்லவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்நேற்று தமது விரிவுரைகளையும் பல்கலைக்கழக உபதபால்நிலைய திறப்புவிழாவையும் பகிஷ்கரித்ததுடன் பல்கலைக்கழக கவுன்சில் கூட்டம் நடைபெற்ற செனட் அறையை முற்றுகையிட்டு மறியல் செய்தனர்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திற்குத் தனியான ஒரு உப-தபால் நிலையம் வேண்டுமென்ற தமது நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்படும் நற்செய்தியை பல்கலைக்கழக நிர்வாகம் தங்களுக்கு அறிவிக்காது விட்டதாலேயே இத்திறப்பு விழாவை தாம் பகிஷ்கரித்ததாக மாணவர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களுக்கு உரிய கௌரவம் அளிக்காது அவர்களைப் புறக்கணித்து வருகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக உபதபால் நிலையத்தை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி.விஜயக்கோன் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திறப்பு விழாவை அடுத்து பல்கலைக்கழக கவுன்சில் கூட்டம் நடைபெற்றபோது இக்கூட்டம் நடைபெற்ற 'செனட்' அறையை நோக்கி கோஷமிட்டுக் கொண்டு சென்ற மாணவர்கள் அறை வாசலில் மறியல் போராட்டம் நடத்தினர்.

இதை அடுத்து மாணவப் பிரதிநிதிகள் நால்வரை கவுன்சில் அழைத்து அவர்களது பிரச்னைகள் பற்றி நேரில் கேட்டறிந்தது.

இறுதியில் பல்கலைக்கழக நகல்புரிச்சங்கத்தை மாதம்

(8ம் பக்கம் பார்க்க)

## "இலங்கையிலுள்ள இயக்கத்தின் துண்டுப்பிரசுரம், ஆயுதங்கள் இந்திய கடற்கரையில் மீட்பு"!

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினரின் துண்டுப் பிரசுரங்களுடன் பெருமதி வாய்ந்த ஆயுதங்களை இந்திய கடலோரத்தில் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் "தினமணி" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின் விபரம் வருமாறு!

"கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 22 கைத்துப்பாக்கிகளும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக சுங்க கலெக்டர் ஆர். ஜெயராமன் கூறினார்.

"இலங்கைக்கு கள்ளத்தனமாக அனுப்புவதற்காக பயங்கரவாதிகள் சேகரித்த ஆயுதங்கள் மண்ணில் புதைக்கப்பட்டிருந்ததாகவும் திரு. ஜெயராமன் கூறினார்.

இதுதொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. பொருட்கள் யாவும் தமிழ்நாடு பொலிஸ் டைரக்டர் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (கு)

## ஜப்பானிய அரசுமீது நம்பிக்கை இல்லை!

### தீர்மானத்திற்கு 240 பேர் ஆதரவு 187 பேர் எதிர்ப்பு

டோக்கியோ, மே 16

ஜப்பானியப் பிரதமர் திரு. ஒகிரா தலைமையிலான அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சியான சோஷலிஸ்ட் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்கள் சபையில் வெற்றி பெற்றதை அடுத்து ஜப்பானிய அரசு ராஜினாமா செய்ய வேண்டியதில்லை ஏற்பட்டுள்ளது.

திரு. ஒகிராவின் அரசு ஜப்பானில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் லஞ்ச ஊழல் ஆகியவற்றைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

பிரேரணைக்கு ஆதரவாக 240 வாக்குகளும் எதிராக 187 வாக்குகளும் கிடைத்தன.

முன்னாள் பிரதமர் திரு தக்கியோ மிக்கியின் ஆதரவாளர்கள் இத்தீர்மானம் மீது வாக்களிக்க மறுத்ததை அடுத்தே அரசுக்கு தோல்வி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜப்பானிய அரசியல் அமைப்பின்படி ஒரு அரசு தோற்கடிக்கப்பட்டால் 10 நாட்களுக்குள் புதிய பொதுத்தேர்தலை நடத்துவதற்காக ஆட்சி மன்றத்தைக் கலைக்கவேண்டும் அல்லது புதிய பிரதமரைத் தெரிவு செய்யும் வகையில் அமைச்சரவை ராஜினாமாச் செய்யவேண்டும்.

இன்றைய நிலையில் பிரதமர் ஒகிரா புதிய தேர்தலை நடத்தும் வகையில் மக்கள் சபையைக்கலைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

8 மாதங்களுக்கு முன்னரே ஜப்பானில் பொதுத்தேர்தல் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜனநாயக குடியரசின் தூதுவர் திரு. ஏறூஜே மே தமது பாரியாருடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இன்று முற்பகல் இங்குள்ள ... இவர் ...

இலங்கையில் ஆகக்கூடிய வட்டி விகிதத்தை
வழங்கும் ஒரே நிறுவனம் "மகாராஜா"
யாழ்நகர் மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

இவற்றை வழங்குவதோடு

சிறந்த 'போட்டோ ஸ்ரட்' பிரதிகளையும் வழங்குகிறது.
பிரதி ஒன்று =/75 சதம் மட்டுமே

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட)
நிதிநிறுவனம்

21% வருடமொன்றுக்கு மாதாந்த வட்டி
23% இரண்டு வருடங்களுக்கு மாதாந்த வட்டி
25% இரண்டு வருடங்களுக்கு காலமுதிர்வு வட்டி

குறைந்த பட்ச வைப்பு : ரூபா 500/-
விபரங்கட்கு:

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8267

மத்தியகிழக்கில் வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு உடன் வேலைவாய்ப்பு உண்டு.

மேசன் தொழில் — தச்சுத் தொழில்
மின் ஒட்டுவேலை — உதவியாளர்
அதிபார வாகனச் சாரதிகள்

கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் உடன் தொடர்பு கொள்ளவும்.

S. pathmanathan J. P.
MANPOWER DEVELOPMENT SERVICES
48, (144) Manipay Road, Jaffna.
Labour Licence No. 500

5796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுவாமிக்குரிய சாற்றுப்படிச் சாமான்கள், 3 சோடி வெள்ளிக்கை, கால், பட்டு, நகை, பதக்கம், காசுமாலை, 2 மணித் திருவாசி, 2 மணி ஆசனம், ந. சுந்தரேஸ்வரசர்மா, சங்கரத்தை, குளத்தடி, வட்டுக்கோட்டையில் தொடர்பு கொள்ளவும். 5781

கிளிநொச்சி 7-ம் வாய்க்காலில் 16 ஏக்கர் நெல்காணி உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி! 46, பிப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 5755

பிரப்பங்குளம் வீதியில் மூன்று கடைகள் உடனடியாக விற்பனைக்குண்டு. ஸ்டோர் ஆகவும் பாவிக்க உகந்தது தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 3/9, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5756

### தேவை

யாழ்ப்பாணம், ஜேயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை தராதரம் மற்றும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். 5777

பலசரக்குக்கடையில் சாமான் நிறுத்துக் கொடுப்பதற்கு 18 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் தேவை. ஐ. சபாரெத்தினம்ஸ் 332A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 5754

யாழ். நகரிலுள்ள பிரபல தனியார் கல்வி நிறுவன மொன்றுக்கு காசாளர் / லிகிதர் தேவை. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 20-5-80 க்கு முன்பாக அனுப்பப்படல் வேண்டும். விளம்பர இல;5787 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 5787

### தவறிவிட்டது

சாவகச்சேரி பஸ் தரிப்பில் அடையாளஅட்டை, ரசீதுகள் அடங்கிய பர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். செ. சற்குணராசா, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 5786

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தங்கராசா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

கோண்டாவில் மேற்கு, சங்கரப்பிள்ளை தங்கராசா கைம்பெண் இராசேஸ்வரி
— மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல 3438

மேலே உள்ள வழக்கு கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தாக்கப்பட்டு அதில் மனுதாரருக்கு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 5791

## பெயர் மாற்றம்

59, கண்டி வீதி, கப்பனை என்ற முகவரியில் வசிக்கும் ப. பரமசாமி ஆகிய நான் 15-5-80 தொடக்கம் எனது பெயரை ப. பரமசாமி பரமேஸ்வரன் என வழங்கி வருகிறேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ப. ப. பரமேஸ்வரன்

5793

## ஸ்கூட்டர் மோதி வயோதிபமாது மரணம்

(மாவிட்டபுரம்)

பண்டத்தரிப்பு- சண்டிலிப்பாய் வீதியில் பிரான்பற்று என்னுமிடத்தில் வீதியால் சென்ற ஸ்கூட்டர் ஒன்று அவ்வீதியால் வந்த 65 வயது வயோதிப மாதை டலி எடுத்துக் கொண்டது.

இராசய்யா சின்னத்தம்பி எனனும் இந்த வயோதிப மாது வீதியால் சென்று கொண்டிருந்தபோது அவ்வழியாக ஸ்கூட்டரில் வந்த எஸ். பி. டேவிட் என்பவர் அவரை மோதினதையடுத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட மூகாட்டி பின்னர் மரணமானார்.

இம்மரணம் குறித்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் மரண விசாரணை நடத்தினார். சாட்சியங்களையடுத்து விபத்து மரணமெனத் தீர்ப்பளித்த பதில்நீதிபதி ஸ்கூட்டர் சாரதியை 1000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதித்தார். சங்கானைப் பொலிசார் இவ்விபத்துக் குறித்து விசாரணை செய்துவருகின்றனர்.

## ஏலவிற்பனை

18-5-80 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு குருநகர் கரையோரமுள்ள மூன்றல் லொறி, கார், ஜீப், போர்ட் ஆகியவற்றின் என்ஜின்களும், உதிரிப்பாகங்களும், கடைச்சல் வேலைக்குரிய பொருட்களும் ஏலத்தில் விடப்படும்.

தொடர்பு கொள்ளவும்

பே. அந்தோனிப் பிள்ளை
ஏலதாரர்

50, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
5789

## கோழி வளர்ப்புக் கடன்

(சங்கானை)

அரசாங்கத்தின் திட்டத் திற்கமைய புலோப்பளை (பளை) பெற்கு கி. அ. சங்கம் கோழி வளர்ப்பிற்கான கடன் உதவி பெறவுள்ளது.

ஜெர்மன் நாடு இலங்கைக்கு வழங்கும் இந்த கடன் உதவி, கி. அ. சங்கத்தின் ஊடாக புலோப்பளையில் 23 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு பளை உதவி அரசாங்க அதிபர் திரு கு. இட்ணர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## மதுவுக்கு அடிமையாகி மரணத்தை தழுவினர்

(பண்டத்தரிப்பு)

நீண்ட நாட்களாக, கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை மதுவுக்குச் செலவிட்ட நபர் ஒருவர், தமது தந்தை கூறிய புத்திமதிகளைக் கேளாமல், கிருமிநாசினி அருந்தி தமது வாழ்வை முடித்துக்கொண்டார்.

இச்சம்பவம், மாதகலில் நடைபெற்றுள்ளது. மாதகல் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் கந்தசாமி என்னும் 35 வயது நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரண விசாரணை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அந்தோனியார் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் தந்தை ஜெகநாதர் மாணிக்கம் சாட்சியமளிக்கையில்; "காலம்சென்ற எனது மகன் அடிக்கடி மது அருந்தும் பழக்கமுடையவர் சம்பவ தினமன்று காலஞ்சென்றவர் மரணவீடு ஒன்றுக்குச் சென்று நன்றாக மது அருந்திவிட்டு வீட்டில் ரகளை செய்தார். நான் அவரைக் கண்டித்துவிட்டு வயலுக்குச்சென்று விட்டேன் பின்னர் அவர் நஞ்சு குடித்ததாக அறிந்தேன்" என்று கூறினார். காலமான வரின் மனைவி சரஸ்வதி கந்தசாமி, வி மாசிலாமணி ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## மட்டு. வளாக முதல்வருக்கு ஜீப் வசதி

(மட்டுநகர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாக வேலைகளை முப்முரமாய்க் கவனிக்கும் பொருட்டு மேற்படி வளாக முதல்வரான பேராசிரியர் திரு. செல்வ இராஜரத்தினத்திற்கு ஜீப் வண்டி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக வளாக வேலைகளைக் கவனிக்க வாகனமின்மையால் வேலைகள் தாமதமாகின. இந்நிலை அவர் வளாகச் செயலாளருக்கு சுட்டிக் காட்டியதையடுத்து கிழக்கிலங்கைக் காகிதத் தொழிற்சாலைக்குரிய ஜீப் வண்டி ஒன்று தற்காலிக உபயோகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 100 வீடுகள் தெரிவாகும்

[சித்தன்கேணி]

கமத்தொழில் சேவைத் திணைக்களம் யாழ். மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, பூநகரி, வேலணை, புத்தூர், தொல்புரம், இராமநாதபுரம், சாவகச்சேரி, உடுவில், புலோலி, அக்கராயன்குளம் ஆகிய கமத்தொழில் சேவை நிலையங்களுக்கு ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவிலும் வீட்டுத் தோட்டம் செய்வதற்கு 100 வீடுகளை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் மூலம் தெரிவுசெய்யுமாறு சுற்றுநிருபம் அனுப்பியுள்ளது.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் வீடுகளைத் தெரிவு செய்யும்போது நிலவசதி, கிணற்று வசதி ஆகியவற்றையும் கவனிப்பார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நூல் அறிமுகம்

## நாராயண பாதபங்கஜம்

திருமால் பெருமையை விளக்குவதாயும், பக்தி ரசம் ததும்புவதாயும் வெளிவந்திருக்கிறது ஸ்ரீ லக்ஷ்மிநாராயணபாதபங்கஜம் என்னும் நூல். இந்நூல் துயில் நீத்தல். ஆடவா என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

திருமால் துயில்வதாகவும் அவரைத் துயில் எழுப்புவதாகவும் அமைந்த முதற்பகுதியில் திருமாலின் திருவடிகளின் பெருமையும் அவரது பேரருளையும் விளக்கப்பட்டுள்ளது. "அகலிகை மீட்டு அழகனே" என்று அவரது திருவடிப் பெருமையும் "தூரணனை வனத்திராமனே" என்று அவர் தொண்டர்களுக்கு அருளிய பெருங்கருணையும் பெருமையும் விளக்கப்பட்டுள்ளன. திருமாலின் அழகைக் கூறும் நூலாசிரியர்;

"அழகின் அழகா
அழகிய புகழா
அன்பரின் ஆனந்தருபனே"

என்று கூறுகின்றார்.

ஆடவாவே என்ற பகுதியில் "நாலாயிரம் பிரபந்தத்திலுள்ளே நாராயணன்" என்பது போன்ற அரிய பல தொடர்கள் விளங்குகின்றன. திருமால் பெருமை நூல் முழுவதும் விளங்கக் காணலாம்.

மூன்று ரூபா அன்பளிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்நூலின் வருவாய் முழுவதும் ஜீ ஜீ சுவாமிஜீயின் ஆச்சிரம நிதிக்கே சேரும்.

நூலை அருளியவர் ஜீ. ஜீ. லக்ஷ்மி நாராயணன் சுவாமிஜீ அவர்கள். வெளியிட்டவர் ஜெயா.

0 0 0

சுவாமிஜீ அவர்கள் தமிழில் பாடிய ஸ்ரீ சுப்பிரபாத பாடல்களுக்கு செல்வி மாலினி ஸ்ரீநிவாசன், ஸ்ரீமதி ஞானம் பிக்க பத்மசிகாமணி ஆகியோர் இசை அமைத்துள்ளனர்.

...'சிவம்'

## கேள்வி விளம்பரம்

### கோப்பாய் கிராமசபை, கோப்பாய்

கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ்காணும் வேலைகளுக்கு சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து 1980-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி 2-30 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 27-5-80 பிற்பகல் 2-30 மணிக்குமுன் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம், கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் செலுத்தியதன் மேல் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளவும்.

| வேலையின் பெயர் | பத்திரப் பணம் | பிணைப் பணம் |
|---|---|---|
| 1. செம்பணிச்சுடலை கட்டிடவேலை. | 10/- | 100/- |
| 2. கோப்பாய் வடக்கு, சங்க வீதி வேலை | ,, | 100/- |
| 3. கோப்பாய் இருபாலை அரசடி வீதி | ,, | 100/- |
| 4. கோப்பாய் வராம்பத்தை ஒழுங்கை | ,, | 100/- |
| 5. கோப்பாய் பெரியபுலம் டாம் வீதி | ,, | 100/- |
| 6. கோப்பாய் அம்மன்கோவில் வீதி- இராச வீதி வேலை | ,, | 100/- |
| 7. கோப்பாய் கட்டப்பிராய் வீதி வேலை | ,, | 100/- |
| 8. கோப்பாய் இலகடி வீதி வேலை | ,, | 100/- |
| 9. கோப்பாய் பேச்சியம்மன் வீதி | ,, | 100/- |
| 10. பிராமணோடை - மகிலடி வீதி வேலை | ,, | 50/- |

ஜே. எஸ். எஸ். ஆனந்தம்,
விசேட ஆணையாளர்,
கோப்பாய் கிராமசபை, கோப்பாய்.

5790


உலகப் பிரசித்தி பெற்ற

# 'ஹொண்டா'

மோட்டார் சைக்கிள்களுக்கு

யாழ். மாவட்ட விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.**
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

## பாடசாலைவிட்டு விலகியோர்க்கான தொழில்நுட்ப வகுப்புக்கள்

மேற்படி வகுப்புக்கள் ஜூன்மாதம்முதல் ஆரம்பமாகவுள்ளன பயிற்சிபெற விரும்புவோர் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். பின்வரும் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

(1) ஒட்டுதலும் பொருத்துதலும் (Welding & Fitting)
(2) மின்சாரக்கம்பி இணைத்தல் (Electric Wiring)
(3) முதியோர் ஆங்கில வகுப்பு
(4) உடைகள் தயாரித்தலும், பூப்போடலும்

பி. கு. க. பொ. த. (சா. த.) வகுப்பில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் சித்திபெற்றவர்கள் மட்டும் 1-ம், 2-ம் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

அதிபர்

5788


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆசைகள் அறுபட்டால் உனக்கு இப்பிறவியிலேயே அமரத்துவம் கிட்டும். பிரம்மனுடன் ஐக்கியம் ஏற்படும்.

—சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### கடற்றொழிலாளர் பாதிப்பு

மன்னார் சௌத்பார் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் படகுகள், முகத்துவாரம் கடலைக் கடந்துசெல்லமுடியாதிருக்கிறது. முகத்துவாரம் கடலின் அடியில் உள்ள பெரியமண்மேடு; படகுகளை குறிப்பாக இயந்திரப் படகுகள் செல்ல முடியாதவாறு தடுக்கிறது.

முகத்துவாரம் கடலைத்தாண்டிச்செல்லும்போது அடிக்கடி படகுகள் மண்மேட்டில் தரை தட்டுகிறது. இதனால் படகுகள் பழுதடைவதும் உண்டு. இதன் காரணமாக மீனவர்கள் மிகவும் கஷ்டமடைந்து வருவதுடன், கடற்றொழிலும் அடிக்கடி பாதிப்படைந்துவருகிறது. எனவே வழமைபோல் முகத்துவாரம் கடலின் அடியிலுள்ள மண்மேட்டை அகற்ற அவசர நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும்.

சி தர்மகுலசிங்கம்
மன்னார்.

* * *

### அம்மையார்பணி பாராட்டத்தக்கது

கடந்த 10-5-80 'ஈழநாடு' பத்திரிகை மூலம் புதுச்செம்மணி பாலமுருகன் கந்தன் கோவில் சகல மக்களினதும் வழிபாட்டிற்காகத் திறந்து விடப்பட்டதென்ற செய்தியும் அந்த ஆலயத்தின் தர்மகர்த்தாவாகிய திருமதி டாக்டர் சுப்பிரமணியம், ஒடுக்கப்பட்ட மக்களை வரவேற்று வழிபாட்டிற்கு இடம் அளித்தார்கள் என்ற செய்தியும் படித்தறிந்து மிகுந்த மகிழ்வுற்றேன்.

நீண்டகாலமாக இவ்வழிபாட்டுரிமைக்காக பலர் பாடுபட்டு வந்துள்ளனர். பல ஸ்தாபனங்கள் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் பயனாக முக்கிய பல ஆலயங்கள் பின் தங்கிய மக்களின் வழிபாட்டுக்கு வழிவிட்டன. இருந்தும் கிராமப் பகுதிகளில் பெரும்பாலான கோவில் கதவுகள் திறக்கப்பட இன்னும் மறுக்கப்பட்டு வருகின்றன இச்சூழ்நிலையில் திருமதி டாக்டர் சுப்பிரமணியம் மிகவும் துணிச்சலுடன் முன்வந்து இச்சாதனையைச் செய்துள்ளது பாராட்டுதலுக்குரியது

மக்களெல்லோரும் ஒருதாய் மக்கள்தான் என்ற கருத்தைப் புரிந்துகொண்டுள்ள அம்மையாரின் துணிச்சலும், முன்னேற்ற நோக்கும் தமிழ்ப்பிரதேசமெங்குமுள்ள ஏனைய ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் வந்துவிட்டால் நிச்சயமாக தேவையற்ற பிரச்னைகளுக்கு இடமற்றமுறையில் 'தமிழர்கள்' தம்மை ஐக்கியப்படுத்திக்கொள்ள வழி சுலபமாகப் பிறந்துவிடும் மேற்படி அம்மையார் பின்தங்கிய சகல மக்களின் நன்றிக்குரியவராக மட்டுமல்ல நாட்டின்முன்னோடியாகவும் ஆகிவிட்டார் என்பதில் சந்தேகமில்லை

இ. செல்வராசா
ஆனந்தபுரம்,
முல்லைத்தீவு.

---

#### பல குறைபாடுகளை எதிர்நோக்கிய போதிலும்

# பொறுப்புணர்ச்சியுடன் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர் இந்த உதவி வைத்தியமாணவர்!

(ஈழநாடு நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கைதடி மருத்துவ பீடத்தில் உதவி வைத்தியர்களாகப் பயிற்சி பெற்றுவரும் மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் தாம் பொறுப்புமிக்கப் பணியில் ஈடுபடப்போகிறோம் என்பதை இப்பொழுதே நன்கு உணர்ந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். என்னும் பலவித மனக்குறைகளுடனேயே இவர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது அறியமுடிந்தது.

பயிற்சியின் முடிவில் தங்களுக்குப்பட்டம் வழங்கப்படவேண்டுமென்றுஇவர்கள்விரும்புகிறார்கள். குறைந்தது பத்து வீதமானவர்களுக்காவது எம். பி. பி. எஸ். படிக்க வாய்ப்பிருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலேயே தங்களுக்குப் பயிற்சியளிக்கப்படவேண்டும் என்றும் இங்கேயே தமது பயிற்சிக்குத் தேவையான வசதிகள் இருக்கின்றனவென்றும் கருதும் இவர்கள் பயிற்சிகளை வசதிகுறைந்த ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றுவதை விரும்பவில்லை.

நாட்டின் பணத்தில் படித்துப் பட்டம் பெறும் வைத்தியர்களில் கணிசமானோர் தாம் பிறந்த மண்ணை மறந்து அதிக வருவாய் பெறும் நோக்கத்துடனும், உயர் கல்வி பெறுவதற்காகவும் பிறநாடுகளுக்குப் படையெடுக்கின்றனர் அரசாங்கம் மாற்று நடவடிக்கையாக அதிக வைத்திய மாணவர்களை எடுத்தபின்னரும் இதே நிலைதான் நீடிக்கிறது வெளிநாட்டு வைத்தியர்கள் சிலரை இங்கு நியமித்த பின்னரும் பிரச்னை தீருவதாக இல்லை. மொழிப்பிரச்னையும், அனுபவமின்மையும் குறுக்கிடு-கின்றன. மேலும் பிறநாடுகளிலிருந்து வருபவர்கள் இங்கு அதிக காலம் சேவை செய்ய விரும்புவதுமில்லை. இதைத் தவிர" எமது நாட்டின் உதவி வைத்தியர்களின் தரத்திற்கு சில வெளிநாட்டு வைத்தியர்களில் தரம் இல்லை என்ற உண்மையும் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் எமது நாட்டின் வைத்தியசேவை சீராக இயங்குவதற்கு உதவி வைத்தியர்கள் (A.M.P) பெரிதும் உழைக்கிறார்கள்.

உதவி வைத்தியர்கள் பெரியாஸ்பத்திரிகளிலும், கஷ்டப் பிரதேசங்களிலுள்ள சிறிய வைத்திய நிலையங்களிலும் பணியாற்றுகின்றார்கள், எமது நாட்டில் 80வீதமானோர் கிராமப்புற மக்கள். இவர்கள் தமது வைத்திய சிகிச்சைகளை உதவி வைத்தியர்களிடமிருந்தேபெறுகின்றனர். எனவே நாட்டின் பெரும்பகுதி மக்களின் வைத்தியத் தேவைகளை திருப்திப்படுத்துவதில் உதவி வைத்தியர்கள் முன்னணி வகிக்கின்றனர். இதனால்தான் பத்து வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் உதவி வைத்தியப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

முன்னைய அப்போதிக்கரிமார்களுக்குப் பதிலாக இப்போது உதவி வைத்தியர்கள் பயிற்றப்படுகிறார்கள் பத்துவருடஇடைவெளிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நெறியின் காலம் மூன்று வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, மகப்பேற்று சிகிச்சைகளும், சிறுபிள்ளை வைத்தியமும் புதிதாகச்சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படுகிறவர்கள் க. பொ. த. சாதாரண, உயர்தரவகுப்புகளில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் மருத்துவபீடத்தில் பயிலவேண்டும்.

### தெல்லிப்பழையில் பூரண வசதிஇல்லை

கடந்தவருடம்தான் முதற்தடவையாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உதவி வைத்தியப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது கைதடியிலுள்ள மருத்துவ பீடத்தில் மருத்துவ மாணவர்களுடன் 30 உதவி வைத்திய மாணவர்களும் பயின்றுகொண்டிருக்கின்றனர் அண்மையில் அவர்களை யாழ்ப்பாண பொது வைத்தியசாலையில் சந்தித்து உரையாடிய போது அவர்கள் தமக்குள்ள குறைகளைமாத்திரமல்ல தமக்கு அளிக்கப்படும் பயிற்சியின் சிறப்புக்களையும் கூட எடுத்துக் கூறினார்கள்.

பாலச்சந்திரன் என்ற மாணவர் கூறினார். 'ஐந்து வருடப பயிற்சியின்போது மருத்துவ மாணவர்கள் படிக்கும் அதே பாடங்களையே நாமும் பயில்கிறோம் ஆனால் அவர்கள் சற்று விரிவாகப் படிக்கிறார்கள்.

"எமக்கு எட்டுத்தவணைகள் பல்கலைக் கழகப் படிப்பும் வைத்தியசாலைப் பயிற்சியும் உண்டு. அதைத் தொடர்ந்து இறுதி ஆறுமாதங்கள் வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்..." என்றார் ராஜ்மோகன் என்ற இன்னொரு மாணவர்.

"யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஆஸ்பத்திரிப் பயிற்சிகள் யாழ் பெரியாஸ்பத்திரியிலும், தெல்லிப்பழை வைத்தியசாலையிலும் நடைபெறுகின்றன. தெல்லிப்பழை வைத்தியசாலையில் இன்னும் பூரண வசதிகள்

[5ம் பக்கம் பார்க்க]

---

### அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் சைவமகாநாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சைவபரிபாலன சபையின் அகில இலங்கை சைவ மகாநாடு அடுத்தமாதம் 5ம் திகதி ஆரம்பமாகி மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டை சென்னைப் பல்கலைக்கழக மெய்யியற்றுறை விரிவுரையாளர் திரு. வை இரத்தினசபாபதி ஆரம்பித்து வைப்பார்.

மகாநாட்டின் ஆரம்பதினமான 5ம் திகதியன்று வடமாகாணத்திலுள்ள கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் 9ம், 10ம் வகுப்புகளுக்குச் சைவசமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான விசேஷ கருத்தரங்கு யாழ் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது இக்கருத்தரங்கில் கொழும்பிலுள்ள பாடவிதான சபையின் பிரமுகர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்

இம் மகாநாட்டில் முக்கிய நிகழ்ச்சிகளாக இளைஞர்கள்-மாணவர்களுக்கான சமயக்கருத்தரங்கு, பண்ணிசை விரிவுரைகள் கவியரங்கு மாதர் அரங்கு என்பனவும் இடம்பெறும் இதற்கான ஒழுங்குகளை மகாநாட்டு அமைப்பாளர் திரு. கந்தசாமி மேற்கொண்டுள்ளார்.

---

# குமரிக்கண்ட வரலாறு: ஆராய்ச்சி வேண்டும்!

## தமிழிசைச் சங்க விழாவில் கோரிக்கை

### உலக இசைகளில் தமிழிசையின் தனிப்பெருமை பற்றியும் பிரஸ்தாபம்

மதுரை, மே. 16

'உலக மொழிகளில் தமிழே மிகப்பழமை வாய்ந்ததென்றும், முச்சங்கம் இருந்ததாகவும் தமிழகத்தில் கருதப்பட்டாலும், ஏழு சங்கங்க்ள் இருந்ததாக சிங்களத்தின் மகாவம்ச நூல் கூறுகிறது. 30,000 ஆண்டுகளுக்கு மூன் கடல் பிரளயத்தால் அழிந்த குமரிக்கண்டமென்ற லெமூரியாக் கண்டத்தில், லட்சக்கணக்கான ஊர்கள் இருந்தன என்று சிங்கள நூல் குறிப்பிடுகிறது அத்லாந்திக் என்ற தீவு 9000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாக அறிஞர் பிளாட்டோ கூறியது இன்று விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது. இதுபோல், குமரிக்கண்ட வரலாறு பற்றியும் ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும்".

மதுரை தமிழிசைச் சங்க 6வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த, கோவை தொழிலதிபர் திரு. என். மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சைக்கோயில் கோபுரத்தை பரதத்தின் 108 கரணங்களைக் காட்டும்வடிவில் சோழமன்னன் அமைத்தது, குமரிக்கண்ட தமிழ்வரலாற்றில் இருந்துகிடைத்தபகுதியே யாகும் அறிவியல் மூலம் பைபிள் மற்றும் இதர மதநூல்களை ஆராய்ந்து, அந்தக் காலத்திலிருந்த நகரங்கள், மக்கள் வாழ்க்கைமுறை முதலியவை பற்றி புதுமையான செய்திகளை வெளிநாட்டினர் வெளியிடுவதுபோல்தமிழ் நூல்களை ஆராய்ந்தால், ஏராளமான செய்திகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும்" என்றும் திரு. மகாலிங்கம் கூறினார்.

[illegible] இசைகளின் தன்மை பற்றி நடைபெற்ற விஞ்ஞான ஆராய்ச்சியில்; தமிழ் இசையால் மனிதனின் ஆன்மீக உருவில் எவ்விதசலனமும் ஏற்படுவதில்லை என்பதை ஆதாரத்துடன் பதிவு செய்துள்ளனர். மற்ற இசைகளால் அந்த உருவம் பாதிக்கப்படுவதாகவும் கண்டறிந்துள்ளனர்" என்றும் திரு. மகாலிங்கம் கூறினார்.

### ஆர். வி. சுவாமிநாதன் பிரசங்கம்

விழாவைத் துவக்கி வைத்து மத்திய ராஜாங்க விவசாய அமைச்சர் திரு ஆர். வி. சுவாமிநாதன் பேசுகையில், தமிழிசை மற்ற இசைகளுக்கு விரோதமல்லவென்றும் தமிழ் இசையைக் கேட்போருக்கு அதன் நயம் மட்டுமின்றி பொருளும் விளங்குமென்றும் அதனால் ஒப்புக்காக இல்லாமல் உள்ளப் பூர்வமாக இசையை ரசிக்கமுடியுமென்றும் கூறினார்.

தமிழிசை வளரவேண்டுமென ராஜாஜி, ராஜாஅண்ணாமலை செட்டியார், கல்கிபோன்றோர் இயக்கமே நடத்தினர் என்றும், தமிழிசை தவிர தமிழ் கல்வி வளர்ச்சிக்காக ராஜா அண்ணாமலை செட்டியார், அழகப்ப செட்டியார், கருமுத்து தியாகராஜன் செட்டியா முதலிய நகரத்தார் பிரமுகர்கள் செய்துள்ள தொண்டு மறக்க முடியாதென்றும் அமைச்சர் சுவாமிநாதன் கூறினார்.

விழாவினையொட்டி குத்துவிளக்கை ராஜா சர் முத்தையா செட்டியார் ஏற்றி வைத்தார்.

......

### இந்துசமய ஆராய்ச்சி மகாநாடு

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கை இந்துவாலிப முன்னணியினர் முதற் தடவையாக கிழக்கிலங்கை இந்து சமயம் பற்றிய ஆராய்ச்சி மகாநாடு ஒன்றை இன்று சனிக்கிழமை மட்டக்களப்பு மைதானத்தில் நடாத்தவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவழிக்குழு பயிற்சி முகாம்!

# அமெரிக்கப் பிரதிநிதிகள் 'நவம்' சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவின் அழைப்பின் பேரில் வடபகுதி வந்திருக்கும் அமெரிக்க வாழ்வு நிலையத்தினைச் சேர்ந்த பிரதிநிதிகளை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சந்தித்து உரையாடினார்.

வடபகுதியில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்டுவருகின்ற இரு வகைப் பயிற்சிகள் மூலம் வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தின் மத்தியில் நல்ல சிந்தனைகளையும், நற்கருத்துக்களையும் பரப்பமுடியும் என்றும் சாதிய கட்டுப்பாடு முறையினால் வடபகுதியில் நடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள், தாக்கங்கள் என்பன பற்றியும் கலந்துரையாடினார்கள். (மகா)

# வணசிங்காவுக்கு விடுதிவசதி; வருட இறுதிவரை நீடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ள இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி. எஸ். வணசிங்கா மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலய அதிபர் விடுதியைப் பாவிப்பதற்கு இவ்வருட இறுதிவரை அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு வணசிங்கா 1978 ம் ஆண்டு இறுதியில் மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் இருந்து கொழும்பு கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இடமாற்றம் செய்யப்பட்ட இவருக்கு மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலய அதிபர் விடுதி வழங்கப்பட்டிருந்தது. இவர் பல பிரச்சினைச் சுட்டிக்காட்டியதன் பிரகாரம் மட்டக்களப்புக் கல்விப்பணிப்பாளர் அதிபர் விடுதியில் வணசிங்கா குடும்பத்தினர் தங்குவதற்கு அனுமதி வழங்கினார். இவ்வனுமதி பலதடவை நீடிக்கப்பட்டுவந்தது. இறுதியாக கடந்த 30 ம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தது. தற்போது தொடர்ந்து இவ்வருடம் டிசம்பர் 31ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசடி மகாவித்தியாலயத்தில் புதிய அதிபராக நியமனம் பெற்றுள்ள திருமதி இராஜு நாகராசா கடந்த ஆறுமாதங்களாகியும் தன்னிடம் விடுதி ஒப்படைக்கப்படவில்லையென்றும் தமக்கு விடுதி அவசியம் என்றும் கல்வி இலாகாவுக்குப் பலதடவை சுட்டிக்காட்டிய போதும் அவகாசம் முடிந்தவுடன் வழங்கப்படுமெனத் தெரிவித்திருந்தனர். ஆனால் அவகாசம் தொடர்ந்து நீடிக்கப்பட்டிருப்பதாகவும் இது சம்பந்தமாய் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை மூலம் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு பரிகாரம் தேடவுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# தென்னைப் பயிர்ச்செய்கை; பண உதவி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் பண உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் தமது தென்னங்காணிகளை முன்னேற்றி அபிவிருத்தி செய்யும்பொருட்டு தென்னைப் பயிர்ச் செய்கை சபை, பல்வேறு உதவித்திட்டங்களின்கீழ் பண உதவி வழங்கிவருகின்றது.

அத்துடன் சபையின் வெளிக்கள ஆலோசனை உத்தியோகத்தர்மூலம், தெங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனையையும், உதவியையும் சபை வழங்கிவருகிறது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணம், பின்னர் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள நாற்று மேடைகளில் 50 சதத்திற்கு நாற்றுக் கன்றுகளைப் பெறவும் சபை ஏற்பாடு செய்துள்ளது. சபையிடமிருந்து மானிய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளோர், நாற்றுக் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம். (அ)

நிறை குறைவான பாணை விற்ற

# குற்றத்தை ஏற்ற எதிரிக்கு சிறையும் அபராதமும்!

(ஊர்காவற்றுறை)

நிறை குறைவான பாணை கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலாக விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு நாலுவாரக் கடூழியச் சிறையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத்தவறின் மேலும் 10 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் உத்தரவிடப்பட்டது.

புங்குடுதீவு ஆலடியைச் சேர்ந்த சந்தையா கனகரத்தினம் என்பவர் 12 அவுன்ஸ் நிறையுள்ள பாணை அதன் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 37 சதம் கூடுதலாக விற்றதாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சிவபாலசுந்தரம் இவ்வழக்கினை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து சட்டத்தின்கீழ் மிகக்குறைந்த தண்டனையையே தாம் வழங்குவதாக தெரிவித்த நீதிபதி திரு. ரீ. கே. என். இளங்கோ மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார். (கு)

## வரியிறுப்பாளர் கஷ்டம்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராமசபை விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய திரு கே. ஞானபாஸ்கரன் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து புதிய விசேட ஆணையாளர் இதுவரை நியமிக்கப்படாததால் வரியிறுப்பாளர்கள் பலத்த கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

## செல்வா பெயர் சூட்ட கோரிக்கை

(நெல்லியடி)

நெல்லியடி பட்டினசபையின் மாம்புலவு வீதிக்கு தந்தை செல்வாவின் பெயரினை சூட்டுமாறு, வதிரி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கம், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினரை கேட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு க. இராசலிங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில், இப்பெயர் மாற்றத்தினை விரைவில் அமுல் செய்ய ஆவன செய்யுமாறுகோரியதுடன் இவ்வீதியை சுமார் 40,000 ரூபா செலவில் புனரமைத்தமைக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி திருத்தப் படவில்லை

(வேலணை)

கடந்த பல மாதங்களாக மண்கும்பான்—சாட்டி வீதி திருத்தப்படாமல் இருந்துவருகின்றது.

சில மாதங்களுக்கு முன் இவ்வீதியின் சிறிய பகுதிகளை மாத்திரம் திருத்தினிட்டனர்.

வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவைச் சேர்ந்த இந்த வீதி மிகவும் முக்கியமானதொரு வீதியாக இருந்தும் திருத்தப்படாமல் இருப்பதையிட்டு மக்கள் தொகுதி எம். பிக்கு புகார் தெரிவிக்கின்றனர். (ஈ)

## உரவகைகள் விநியோகம்

[புலோலி]

தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிக்குமுகமாகத் தென்னை வளர்ப்புச் சபை மாவட்டங்கள் தோறும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தென்னங்கன்று உரவகைகளை விநியோகம் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து யாழ் மாவட்ட சமூக நலச் சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வே பரமலிங்கம் இந்த உரவகைகளை தென்னை வளர்ப்புச் சபையிடம் பெற்று சமூகநலச்சேவை நிலையங்களுக்கூடாகப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பெரும்பாக உத்தியோகத்தர்களையும் பணித்துள்ளனர். [க]

## புதிய சமாஜம் அமைக்க முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களின், அரசாங்க சார்புடைய பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சமாஜம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஏற்கனவே பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்கம் ஒன்று இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் தமிழ் மொழி வழி தொழிற்சங்கத்துடன் சேர்ந்து செயல்படுகின்றது. (அ)

## கல்லாற்றில் ஆழ்கடல் மீன்பிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், பட்டிருப்புத் தொகுதியிலுள்ள கல்லாற்றில் ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் மீனவர்கள் ஈடுபடவுள்ளனர். இக்கிராம மீனவர் சங்கத்தைச் சேர்ந்த நூறு மீனவர்கள் இதில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இத்திட்டத்தில் ஈடுபடும் மீனவர்களுக்கு மக்கள் வங்கி கடன் உதவி வழங்கவுள்ளது.

புங்குடுதீவு கத்திக்குத்து வழக்கு:

# சந்தேகநபர்கள் நால்வரும் பிணையில்செல்ல அனுமதி

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு கத்திக்குத்து வழக்கில் சந்தேகநபர்கள் நால்வரும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவில் வல்லிபுரம் சிவராசா என்பவர் கத்தியால் குத்தப்பட்டது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிசாரால் தேடப்பட்டுவந்த இச்சந்தேகநபர்களில் முதலாவது சந்தேகநபரான பேரம்பலம் புறக்கோட்டைப் பொலிசாரால் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

இச்சமயத்தில் ஏனைய சந்தேகநபர்களான மோகினி என்று அழைக்கப்படும் யோகநாதன், திருநாவுக்கரசு, நவரத்தினம் ஆகிய மூவரும் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

கத்திக்குத்து சம்பவத்தில் 2வது சந்தேக நபருக்கு மாத்திரமே தொடர்பு இருப்பதாகவும் தற்பாதுகாப்புக்காகவே இக்காயத்தை விளைவித்ததாகவும் தெரிவித்த சந்தேகநபர்களின் சட்டத்தரணி ஏனைய சந்தேகநபர்கள் வேண்டுமென்றே இவ்வழக்கில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சந்தேகநபர்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட

(8ம் பக்கம் பார்க்க)

# செய்தித் திரட்டு

## பிரதி உயர்கல்வி அமைச்சர் விஜயம்

(கோண்டாவில்)

பிரதி உயர்கல்வி அமைச்சர் அமைச்சர் திரு ஆர். பி. விஜத நாயக்க அடுத்தவாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

இவர் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்போது யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனம் ஆகியனவற்றுக்கும் விஜயம் செய்வார்.

## கவியரங்கு

(ஊர்காவற்றுறை)

தமிழ்மறைக் கழகத்தால் நடாத்தப்படும் 20வது திருக்குறள் மகாநாட்டின் இறுதி நாளான இம்மாதம் 31-ம் திகதி காலை நிகழ்ச்சியாக கவியரங்கு இடம்பெறுகிறது.

இக்கவியரங்கில் கவிஞர்கள் காவலூர் எஸ் ஜெகநாதன், இரா. முருகையன், காரைசுந்தரம்பிள்ளை, சண்முகநாத பிள்ளை, சித்தூரான் சி. ஆறுமுகம், பா. சத்தியசீலன் ஆகியோர் பங்குபற்றுகிறார்கள் இக்கவியரங்கு திரு. சொக்கன் தலைமையில் நடைபெறும் (கு)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஒரிருமாதங்களுக்கு முன்னர் இடமாற்றலாகிச் சென்ற டாக்டர் செல்வி வசந்தரா பெரியதம்பி மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பதவி உயர்வுபெற்று மீண்டும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றலாகி வந்துள்ளார். [ ]

## 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு உப அஞ்சல் அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பு கொடுப்பதற்காக ஊர்காவற்றுறை எம். பி. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 40,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார் [கு]

[நெல்லியடி]

அச்சுவேலி வடக்கு சனசமூக நிலையத்தில் கட்டடத்தை நிறுவ லாலா சோப் நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர் உரிமையாளர் திரு. பொன். வன்னியசிங்கம் இக்கட்டடவேலையை சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் பூர்த்திசெய்து கொடுக்கவுள்ளார்.

## கந்தரனுபூதி மனனப்போட்டி

[சுழிபுரம்]

"நிலையக்குரல்" ஆதரவில் வருடாவருடம் நடாத்தப்பட்டு வரும் கந்தரனுபூதி மனனப்போட்டி இம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு இம்மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை பருளாய் செகட்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் சங்காபிஷேக விழாவில் வைத்து வழங்கப்படும்.

## புதியநிர்வாகிகள்

(மட்டுவில்)

சாவகச்சேரி தெற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் நிர்வாகிகள்.

தலைவர் சி. க. மயில்வாகனம், உபதலைவர் கி. வ. கந்தசாமி ஆச்சாரி, செயலாளர்: இ. சின்னத்தம்பி, உபசெயலாளர்: த. நாகேஸ்வரன், பொருளாளர்: கு. வை யோகராஜா, மேலும் 6 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## 2 அதிகாரிகள் நியமிக்கப்படுவர்'

(பசிலைப்பட்டினி)

யாழ். மாவட்ட தென்னை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்களைத் தீர்த்துவைக்கும் வகையில், தென்னை உற்பத்தியாளர்களுக்கு உதவுமுகமாக மேலும் இரு அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## அரச அதிபரிடம் முறையீடு

(பச்சிலைப்பள்ளி)

புலோப்பளை கிராமோதய மன்றத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் தான் கொழும்பில் சிரமதானப் பணிபுரியச் சென்றதால் சம்பளம் வழங்கப்படவில்லையென யாழ் அரசாங்க அதிபரிடம் நேரில் சென்று முறையிட்டார்.

இதுசம்பந்தமாக யாழ் அரச அதிபர் கூறுகையில் லீவுக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதி கிடைத்தபின்னர்தான் அரச ஊழியர்கள் லீவினை எடுக்கவேண்டுமெனக் கூறினார். (ந)

## பஸ்சேவை சீர்கேடு

(வேலணை)

தீவுப்பகுதி பஸ்சேவை மிகவும் சீர்கெட்டுள்ளது என்று பிரயாணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

தீவுப்பகுதிச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில் பிரயாணம்செய்வோர்களிடம் ஏனைய இடங்களைவிட கூடுதலான பஸ் கட்டணங்களை அறவிடப்பட்டு வருவதாகவும் பிரயாணிகள் குறைகூறியுள்ளனர். (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதிக்கு உதவும் புதிய கூட்டு ஒப்பந்தம்

## மோஷோ நாடுகள் கைச்சாத்து

மொஸ்கோ, மே 16

சர்வதேச நிலையில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மொஸ்கோ ஒப்பந்த நாடுகளின் தலைவர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆயுதப்பரிகரணம், உலக அமைதி என்பவற்றை நிலைநாட்ட உதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படும் இந்த கூட்டு ஒப்பந்தத்தை மொஸ்கோவில் நடைபெற்ற முடிந்த உச்சிமகாநாட்டின் பின்னர் வெளியிட்டுள்ளனர்.

மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தைத் தளர்த்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தில் ஏழு நாடுகளின் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் குறித்து சோவியத்யூனியன் அதிபர் திரு பிரஷ்னேவ் கருத்துத் தெரிவிக்கையில், "சர்வதேச அரங்கில் நெருக்கடிகள் நிலவும் இவ்வேளையில் இந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியத்துவமாய்ந்ததாக இருக்கும்" என்றார். (க)

# கார்ட்டர் எச்சரிக்கை

## காங்கிரஸ் நிராகரித்தது!

வாஷிங்டன், மே 16

அமெரிக்காவுக்கு வெளிநாடுகளிடையேயுள்ள மதிப்பு மங்கிவிடும் என்ற அதிபர் திரு ஜிம்மிகார்ட்டரின் எச்சரிக்கையை அமெரிக்க காங்கிரஸ் உதாசீனம் செய்துள்ளது.

சர்வதேச வங்கிகளுக்கு வழங்கும் நிதியை குறைத்துக்கொள்வது அமெரிக்காவின் மதிப்பை பாதிக்கும் என்று திரு கார்ட்டர் எச்சரிக்கை செய்திருந்தும் கூட காங்கிரஸ் அதனை நிராகரித்து உதவி வழங்குவதை என்றுமில்லாதவாறு குறைத்துள்ளது.

ஆசிய, ஆபிரிக்க, அபிவிருத்தி வங்கிகளுக்கு வழங்கி வரும் 440 கோடி டாலர் பண உதவியை 10 சதவீதத்தால் குறைத்துவிடுவதென காங்கிரஸ் முடிவுசெய்துள்ளது. (கு)

# இந்தியாவின் முதலாவது யுத்தக்கப்பல்

பம்பாய், மே 16

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது யுத்தக் கப்பல் நேற்று முதன்முதலாக பம்பாயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

சக்திவாய்ந்த ஏவுகணைகளைக் கொண்ட இந்தக் கப்பலில் நீர்மூழ்கிக்கப்பல்களை கண்டுபிடித்துத் தாக்கும் நவீன இலத்திரோனிக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. (கு)


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் றோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் இம்மாதம் 25ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் றோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

றேட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ................ சிறந்த சாரதி பெயர் ................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர் பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்........................ஒப்பம்..........

விலாசம்..........................................


# பொறுப்புணர்ச்சியுடன்....

[3-ம் பக்கத் தொடர்ச்சி] செய்யப்படாததால் தற்போதைக்கு இங்கே மாத்திரம்தான் பயிற்சிகள் நடக்கின்றன என்றார் பேரின்பநாயகம். இப்பயிற்சியின்போது மருத்துவம், சத்திரசிகிச்சைப் பிரிவு, சிறுபிள்ளை வைத்தியம், மகப்பேற்று வைத்தியம் முதலான பல்வேறு துறைகளில் விசேட வைத்திய நிபுணர்களின்கீழ் பயிற்சி பெறுகிறோம்" என்றார் யாழினி.

"இங்கே இப்போது நீங்கள் பெறுகின்ற பயிற்சியைப்பற்றி சிறிது சொல்லுங்களேன்" என்றேன். இந்துமதி நல்ல கம்பீர புன்னகையுடன் பதிலளித்தார். "எங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். எம்மில் சரி பாதிப்பேர்கள் பெண்களாதலால் ஒவ்வொரு பிரிவிலும் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையில் இருக்கிறோம். காலையில் வார்ட்டுகளிலும், கிளினிக்குகளிலும் வைத்திய நிபுணர்களும், வைத்தியர்களும் நோயாளிகளைப் பரிசோதிக்கும் முறைகளையும், நோய்களைப்பற்றியும் படிப்பிப்பார்கள். மாலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், வைத்தியசாலை நிபுணர்களும் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்" என்றார். "மிகக் குறைந்த வசதிகளுடன் இறந்த பயிற்சி தரும் இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது" என்றார் மரியதாஸ். "நாம் வைத்தியசாலையில் பயிலும் முதலாவது வைத்தியத்துறை மாணவர்கள் நாம் என்பதால் இங்கே சில நடைமுறைச் சிக்கல்களையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது. காலப்போக்கில் சகல வசதிகளும் கிட்டும் என்றே நம்புகிறோம்" என்றார் கதிர்மலர்.

### வைத்திய நிபுணர்கள்

"உங்களுக்குப் பயிற்சியளிக்கும் வைத்திய நிபுணர்கள் யார் யார்?" என்று கேட்டேன். நளாயினி திருநாவுக்கரசு என்ற மாணவி அமைதியாகப் பதிலளித்தார். மருத்துவத்தில் வைத்திய கலாநிதிகளான ஜெகா பசுபதி அவர்களும், திருமதி நாகேந்திரா அவர்களும், குலேந்திரன் அவர்களும் இவர்களது உதவியாளர்களும் பயிற்சி தருகிறார்கள். பலதரப்பட்ட நோயாளிகளுடன் பழகும்போது பல அனுபவங்கள் கிடைக்கின்றன. நான் திருமதி நாகேந்திரா அவர்களின் கீழ் மருத்துவப்பயிற்சி பெறுகிறேன். எனது மனதைக் கவர்ந்துவிட்ட ஒரு டாக்டர்" என்றார்.

"சத்திரசிகிச்சைப் பகுதியில் பயிற்சியளிப்பவர் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சேவியர் அவர்கள்" என்றார். மட்டக்களப்பைச் சேர்ந்த பூபணி சாமித்தம்பி "வாட்டிலும் கிளினிக்குகளிலும், சத்திரசிகிச்சைசாலையிலும் பயிற்சி பெறுகிறோம். வைத்திய நிபுணருடன் ஏனைய வைத்தியர்களும் உதவுகிறார்கள்" என்றார் றசீட்.

அடுத்ததாக மகப்பேற்றுத் துறையைப் பற்றிக் கேட்டபோது திருச்செல்வம் விபரமாகப் பதிலளித்தார். "மகப்பேற்றுத்துறையில் வைத்திய கலாநிதிகளான சபாரட்ணம் அவர்களும், திருமதி நிர்மலா பசுபதி அவர்களும் இவர்களுடைய உதவியாளர்களும் பயிற்சியளிக்கிறார்கள். இப்பயிற்சிகளின்போது தாதிமார்களும், மருத்துவமாதர்களும், பிற ஊழியர்களும் ஒத்துழைப்புத் தருகின்றனர்" என்றார்.

"இவை தவிர எமக்குத் தாதிகள் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்களும், பிரதம மருந்தாளரும், ஆய்வுகூட அலுவலகர்களும் அவ்வத் துறைகளில் செயல் முறைப் பயிற்சிகளைத் தருகிறார்கள்" என்று விக்கினேஸ்வரி [illegible] சடாபதி.

"வைத்திய கலாநிதி பத்மநாதன் அவர்கள் நோயியல், நுண்ணுயிரியல் ஆகிய பாடங்களில் விரிவுரை நிகழ்த்துகிறார். சட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி சரவணபவானந்தன் அவர்கள் முதலுதவி, மூளிவு, நெரிவு பகுதிகளில் பயிற்சி தருகிறார்" என்று அடுக்கிக்கொண்டே போனார் சிவனடியான்.

"எமது பொறுப்பதிகாரி பேராசிரியர் சிவஞானசுந்தரம் [illegible] அவர்கள் வெளிநாடு சென்ற பின்னர் எமது உடற்றொழிலியல் பகுதித் தலைவர் கலாநிதி பரமேஸ்வரன் அவர்கள் பொறுப்பதிகாரியாக இருந்து எமது பிரச்னைகளை உடனுக்குடன் கவனிக்கிறார். விரிவுரையாளர்கள் பற்றாக்குறையினால் தவிக்கும் எமக்கு வைத்தியகலாநிதி திருமதி கருணாகரன் போன்றோர் தமது சிரமத்தையும் பாராது விரிவுரைகள் நிகழ்த்துவதை எம்மால் மறக்க முடியாது..." என்றார் உதவி வைத்திய மாணவர் மன்றத்தலைவர் திரு. தம்பித்துரை.

### பல குறைகள்

"எம்முடனே என்றும் உறுதுணையாக இருக்கும் எமது விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி பொன்னம்பலம் அவர்களுக்கும் உதவிகள் பல புரியும் வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். வகுப்பறை வசதியீனங்கள், ஊழியர்களுக்கு பற்றாக்குறை போன்ற பல குறைகள் எமக்குண்டு" என்றார் கதிரவேல் ஆனந்தன்.

"எமது வைத்தியசாலைப் பயிற்சிகள் தொடர்ந்து யாழ் வைத்தியசாலையிலேயே நடந்தால் நன்றாக இருக்கும். மற்றைய வைத்தியசாலைகளில் போதிய வசதிகள் இல்லை. எனவே அங்கே எமக்குச் சிறந்த பயிற்சியை பெறமுடியாது. கொழும்பு பேராதனை மாணவர்கள் பெரியாஸ்பத்திரிகளிலேயே பயிற்சிபெறுகிறார்கள். முதலாவது பரீட்சையில் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் பார்க்க நாம் முன்னணியில் நின்றோம். இச்சாதனையைப் புரிய வைத்தியகலாநிதிகளான [illegible], சிவபாலசுந்தரம், சத்தியநாதன், பேராசிரியர் கணேசரத்தினம், கதிர்காமநாதன் ஆகியோர் அயராது உழைத்தார்கள். இந்நிலை தொடருவதற்கு எமது பயிற்சியைத் தொடர்ந்து யாழ் வைத்தியசாலையிலேயே நடத்தவேண்டும். இதைத் தவிர எமக்கு பட்டதாரி ஆகும் தகுதி பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. எமது சேவை முக்கியத்துவத்தை அறிந்து எமக்கு பட்டம் வழங்கப்படவேண்டும். பத்து வீதமான மாணவர்களுக்கு எம். பீ. பீ. எஸ் படிக்க வாய்ப்பளிக்கவேண்டுமென்ற எமது கோரிக்கை அரசால் நிராகரிக்கப்பட்டது. தொழில் நுட்ப விஞ்ஞானிகள் பட்டதாரிகளாக வர வாய்ப்பிருக்கிறது. அதேபோல நமக்கும் எம். பீ. பீ. எஸ். படிக்க வாய்ப்பளிக்கவேண்டும். எமக்கு உயர்தர வகுப்பில் அடிப்படைத் தகுதிகளும் உண்டு. ஏன்தான் எமது உயர்ச்சியை அங்கீகரிக்கிறார்களில்லையோ?" என்று மனவருத்தத்துடன் கூறினார் உதவி வைத்திய மாணவர் மன்றச் செயலாளர் முருகானந்தன். இவர் ஒரு எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"எது எப்படியோ யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து வெளிவரப்போகும் முதலாவது வைத்தியர்கள் என்ற பெருமை எமக்குண்டு" என்றார் உளர்மதி சாந்தகுமார் கொண்டே.

.......

# நாரந்தனை ஸ்ரீகந்தசுவாமி ஆலய உற்சவம்

(சரவணை)

நாரந்தனை-சரவணை ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இம்மாதம் 27ந் திகதி இரவு நடைபெறும் சப்பரத்திருவிழாவை யடுத்து மறுதினம் தேர்த்திருவிழா நடைபெறும். தீர்த்தத் திருவிழா, பூங்காவனம் 29ம், 30ம் திகதி களில் நடைபெறும்.

# இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

"ஸ்ரீ ரசிக ரஞ்சன சபாவின் 29வது ஆண்டு விழாவின் 9வது நாளான இன்று சனிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

மாலை 6 45—8-15 மணி வரை திருமதி லக்சுமிதேவி பாலகிருஷ்ணன், பாட்டு, திருமதி பி ஞானம்பிகை வயலின் திரு. ஏ. சந்தான கிருஷ்ணன் மிருதங்கம், 8-15—8-30 மணி வரை தலைமையுரை, திருமதி ஞானகுலேந்திரன் விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம் 8-30—10-00 மணி வரை திருமதி [illegible] பாட்டு, [illegible] தனதேவி சுப்பையா வயலின், திரு. ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கம் (ஜொ)

# நாளை அகில இலங்கை பண்ணிசைப் போட்டி

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அகில இலங்கை ரீதியில் பண்ணிசைப் போட்டி [illegible] நாளை யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடத்துகிறது.

கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு மேற்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதலாமிடத்தை பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும். [illegible] சேர்ந்த திரு. எஸ். [illegible] வழங்கியுள்ளார்.

# தங்கநகை மோசடி: இளம் பெண் பிணையில்

(ஊர்காவற்றுறை)

பலஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகளை நம்பிக்கை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட எழுகிலை சந்தேகநபரான இளம் பெண் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவ்வழக்கில் காரைநகர் வடக்கைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை பரமேஸ்வரி என்ற இச் சந்தேகநபர் தமது உறவினரான 70 வயது மூதாட்டி ஒருவரின் நகைகளை நம்பிக்கை மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேகநபர் ஊர்காவற்றுறை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது ஆயிரம்ரூபா பிணையில் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணிகள் எஸ் ஸ்ரீகாந்தா, பி. லைவாசநாதன், ஆர். சபேசன் ஆகியோர் ஆஜரானார்கள். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஹிந்திமொழி திணிப்பு இல்லை

# பிரதமர் இந்திராவின் உறுதிமொழி தேர்தல் அறிக்கையிலும் வலியுறுத்து!

## பல்கலைக்கழக நிர்வாகத்தில் மாணவர்க்கும் பங்கு

சென்னை, மே 16

எந்தவொரு மக்கள் மீதும் ஹிந்தி மொழி திணிக்கப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் உறுதிமொழி இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழக தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு விசேஷ திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பனவும் பாதுகாக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திராகாங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை நேற்றுமாலை மாநிலத்தலைவர் திரு பி சுப்பிரமணியம் வெளியிட்டார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

● பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் மாணவர்களுக்கும் பங்களிக்கப்படும்.

● தொழில் வழங்கும் நிலையங்களில் வேலைகளுக்காக விண்ணப்பித்து 3 ஆண்டுகளாக வேலை கிடைக்காது இருந்துவரும் பட்டதாரிகளுக்கு மாதமொன்றுக்கு 75 ரூபாவும், 5 ஆண்டுகளாக காத்திருப்போருக்கு 100 ரூபாவும் வழங்கப்படும்.

● விவசாயிகளின் நீண்டகால கடன்களை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளின் மின்கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

● விவசாய தொழிலாளர்களுக்கு விபத்து இழப்பீடு எடுக்கப்படுவதுடன் விவசாயி தொகை வழங்கப்படும். (கு)

## கைக்குழந்தைகளுக்கு கல்யாணம்!

சுரேந்திரநகர், மே 16

குஜராத்தில் சுரேந்திரநகரை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரே சமயத்தில் 180 கல்யாணங்கள் நடந்தன. இந்தக் கல்யாணத்தில் மாப்பிள்ளைகள், மணப்பெண்கள் அனைவருமே 6 மாதம் முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளாவர்.

மங்கள உடைகளுடன் மணக்கோலம் பூண்டுள்ள இந்தக் குழந்தைகளை அவர்களது பெற்றோர்கள் தூக்கி வருகிறார்கள்.

கல்யாணச் சடங்குகள் நடந்து முடியும் வரையில் இக்குழந்தைகளை அவர்களின் தந்தையர்கள் தூக்கி வைத்துக்கொண்டு நிற்கிறார்கள்.

ஐந்தைந்து ஜோடிகளாகத் திருமணம் நடக்கிறது. 5 புரோகிதர்கள் வேதமந்திரங்களை முழங்குகிறார்கள். பெண்கள் மங்கள கீதங்களைப் பாடுகிறார்கள்.

இந்தக் கல்யாணங்களில் மணப்பெண்ணின் தந்தை மாப்பிள்ளையின் தந்தைக்கு ரூபா 250 ரொக்கம் அளிப்பது ஒரு மரபாகும். அன்றியும் கல்யாணச் சாப்பாட்டிற்காக ஒவ்வொரு மணப்பெண்ணின் தந்தையும் ரூபா 200 தரவேண்டும்.

இந்தக் கல்யாணங்களுக்கு சுற்றமும் நட்பும் சூழ வருகின்றனர். எனவே அந்த கிராமமே விழாக்கோலம் பூண்டு வருகிறது.

திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் தத்தம் பெற்றோர் வீட்டிற்கே சென்று விடுகிறார்கள். 18 வயது ஆன பிறகுதான் அவர்கள் கணவன்—மனைவியாக வாழ்க்கை துவக்குகிறார்களாம். (கு)

## தற்காலிக தலைவராக அபூபக்கர்!

சென்னை, மே. 16

இந்திரா காங்கிரஸ்கட்சியின் திருநெல்வேலிமாவட்டத்தின் தற்காலிக தலைவராக ஜனாப் அபூபக்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாவட்டக்கிளையின் நிர்வாகத்தை மாநிலத்தலைவர் திரு. எம். பி சுப்பிரமணியம் கலைத்துவிட்டதைதொடர்ந்து தற்போது தற்காலிக தலைவராக ஜனாப் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆலோசனை செய்துமற்றைய நிர்வாகிகளைத் தெரிவுசெய்வார். (கு)

## தி. மு. க-இ. காங். கூட்டணியை ஆதரிக்கும்

மதுரை, மே. 16

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தலில் தி. மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டணியை ஆதரிப்பதென மதுரை பஞ்சாயத்து தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளது. (கு)

## உபஅஞ்சல்நிலையம்

(நெல்லியடி)

கரணவாய் தெற்கில் அமையவிருக்கும் உபஅஞ்சல் அலுவலகமொன்றை யாழ்மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் இன்று திறந்து வைத்துள்ளார்.

## "ஆப்கான் சுதந்திரத்தை ரஷ்யா பாதுகாத்துள்ளது"

### பிரதமர் கார்மல் கருத்து

புதுதில்லி, மே 16

"நாட்டின் தேசிய சுதந்திரத்தையும் பிரதேச கௌரவத்தையும் பாதுகாத்து வெளிச்சக்திகளின் ஆத்திர மூட்டல்களையும், ஆக்கிரமிப்பையும் எதிர்க்க ஆப்கான் அரசுக்கு உதவும்பொருட்டு அதன் வேண்டுகோளின்பேரிலேயே சோவியத் துருப்புக்கள் வந்தன"

"இந்தியா டுடே" என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில், ஆப்கான் பிரதமர் பப்ராக் கார்மால் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறிதளவு சோவியத் படைகள் இருப்பது பற்றிய மேலை நாடுகளின் அ-நூறாப் பிரசாரத்தை, அவர் வன்மையாகம் இப்பேட்டியில் கண்டித்தார்.

"சோவியத் யூனியனை, ஆசிய ஆபிரிக்கத்தின், அமெரிக்க நாடுகளில் தேசியவிடுதலை இயக்கங்கள் பாதுகாவலாகவே எப்பொழுதும் ஆப்கான் மக்கள் கருதிவந்திருக்கின்றனர்" என்று பப்ராக் கார்மால் கூறினர்.

பாகிஸ்தான் பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பிலும் பதட்டாயஸ்திலும் பாகிஸ்தான் தீவிர அக்கறைகாட்டி அதன் பிரதேசத்திலுள்ள அந்நிய இராணுவத் தளங்களையும் முகாம்களையும் அகற்றினால்தான் ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே உறவுகளை சகஜப்படுத்துவது சாத்தியமாகும்" என்றார்.

பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சி

# பேச்சுவார்த்தைகளில் எகிப்து கலந்துகொள்ளாது

கெய்ரோ, மே 16

பாலஸ்தீனர்களுக்குசுயாட்சி வழங்குவது தொடர்பாக அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் பேச்சு நடத்தப்போவதில்லையென்று எகிப்து முடிவுசெய்துள்ளது.

இஸ்ரேலின் நகரான ஜெருஸலேமின் மண்ணில் ஒரு சிறு துண்டுகூட பாலஸ்தீன மக்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று இஸ்ரேல் அறிவித்ததைத் தொடர்ந்தே இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதில்லை என்று எகிப்து முடிவுசெய்தது.

எகிப்தின் இந்த முடிவை கெய்ரோவிலுள்ள எகிப்தின் வெளிநாட்டமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே தெரிவித்துள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் கவனம் செலுத்தாததுடன் உதாசீனம்செய்து வருகின்றது என்றும் அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (கு)

## உஷா காங்கிரஸ்

பஸ்தி, மே 16

உத்திரப் பிரதேசத்தில் புதிய காங்கிரஸ் கட்சியொன்று 'உஷா காங்கிரஸ்' என்ற பெயரில் உதயமாகியுள்ளது.

இக்கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் எல்லாமே திருமதி உஷா தேஷ்பாண்டே என்னும் ஒருவரே

இந்திராகாந்தி தமது பெயரில் கட்சியை உருவாக்க முடியுமெனில் நான் ஏன் என் பெயரில் கட்சியை உருவாக்கக் கூடாது என்று நினைவு இனார் திருமதி உஷா (கு)

## கருணாநிதி பங்களூர் பயணமானார்


பங்களூர், மே 16

தி. மு க. தலைவர் திரு மு. கருணாநிதி, கர்நாடக முதல்வர் திரு. ஆர் குண்டுராவுடன் பேச்சுநடத்துவதற்காக இன்று பங்களூர் வந்துசேர்ந்தார்.

தேர்தல் பிரசார வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த திரு. கருணாநிதி திடீரென பங்களூர் பயணமானது பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த பானம்...

KLIM




"க்ளிம்" பிரசித்தி பெற்ற பால்மா உற்பத்தியாளர்களான அயர்லாந்து, போர்டன் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், விட்டமின் A & D நிறைந்த 28% வெண்ணை, கொழுப்புச் சேர்த்து உலகத்திலேயே முதன் முதலாக தயாரிக்கப்பட்ட பால்மா. "க்ளிம்" சுவை நிறைந்தது. நீண்டகாலம் பத்திரப்படுத்தக்கூடியதும், சுகாதாரத்திற்கேற்ப பதப்படுத்தப்பட்ட தன்மையும் கொண்டது.

கவர்ச்சியான ரின்களில் எவரும் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கிறது.

பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும், முன்னணி வியாபாரிகளிடமும் பெறலாம்.

விலை ரூபா 16-50

மார்க்பெட்

ஸ்ரீ லங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம் (மார்க்பெட்)
127 ... கொழும்பு-14.
தொலைபேசி: 29991-2-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 3-30, 4-45, 7-00 & 9-45
LAST FEW DAYS ONLY
MARATHON MAN
—A THRILLER — COLOR—
Coming "SHARK'S TREASURE" —Color

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி விஜயா நாகேஷ்
திருடன்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 8 வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-30, 7-15 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 5 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 8-45
BLESS THIS HOUSE
(Color)

ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
கமலஹாசன் (இருவேடங்களில்)
ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்த கொட்டகை நிறைந்த காட்சிகளாக ... பிக்கற்றுக்களுக்கு முந்திக் கொள்ளுங்கள்

## நல்லுறவுக் கழகம்

(நெல்லியடி)

அச்சுவேலி பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் கழகம், இப்பகுதி மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளையும், பூசல்களையும் சமாதானமாகத் தீர்த்துவைப்பதில் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது.

இக்கழகம் அமைக்கப்பட்ட குறுகிய காலப் பகுதிக்குள், நீண்ட கால கிணற்றுப்பிரச்சினையொன்றைச் சுமுகமான முறையில் தீர்த்துவைத்துள்ளது.

## மின்இணைப்பு விஸ்தரிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை மின் இணைப்பு விஸ்தரிப்புக்காக 90,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தைக் கொண்டு ஒன்பது வீதிகள் மின்வெளிச்சம் பெறவுள்ளன. ஒவ்வொரு வீதிக்கும் பத்தாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி— விஜயகுமாரி
குங்குமம்
(புதிய பிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்
(புதிய பிரதி)

ஹரன் (வல்வெட்டித்துறை)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—பிரமிளா
அன்புச் சகோதரர்கள்
(புதிய பிரதி)

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 4 திகதி
(17-5 80) சனிக்கிழமை

மேடம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு, உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

இடபம்: கண்துடைப்பு வேலை நடைபெறும், கால்நடைகளினால் நஷ்டமுண்டு, குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமற்றதாக இருக்காது, மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும், மட்டமான தினம்.

மிதுனம்: தனசாலிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும், வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும், கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும், மௌனம் நன்று.

கடகம்: நேர்முகப் பரீட்சைக்கு உவந்த தினம். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

சிங்கம்: ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக் கூடும், அடுலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும், நிதானம் நன்று.

கன்னி: கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும், தாய்வழிச் செய்தியும் வரலாம், அறிஞர்கள் ஆதரவு தருவர், தொழில் புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும், இன்று சுபதினம்.

துலாம்: அதவழியில் நாட்டம் செல்லும், வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும், இரக்க சிந்தையின்மூலம் பொருட்செலவுண்டு, கற்ற மனிதர்களின் வாழ்த்து கண்டிப்பாகக் கிடைக்கும்.

விருச்சிகம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்திய செலவுகளைக்கும் இடமுண்டு, இன்று ... ஒருவருக்கு ... முறையில் கவனிக்கப்படல் வேண்டும்.

தனுசு: ஒளிமயமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள், இன்று ஏற்படும் திருப்புமுனை நிம்மதியை அளிக்கும், இதன் நலனும் உண்டு.

மகரம்: விஷப்பரீட்சையின்மூலம் விபரீதங்கள் விளையும், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும், இன்று சும்மா இருப்பதே சுகம்.

கும்பம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை, காதலர்கள் எண்ணங்கள் பலிக்கக்கூடும், இன பந்துக்கள் ஆதரவு கிடைக்கும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

மீனம்: அன்புக் கரங்கள் அணைக்கும், அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம், தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும்.

## மின்னொளி கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

(உடுவில்)

அளவெட்டி கணேஸ்வரம் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 3வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்பமாகிறது. மின்னொளியில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் மொத்தம் 97 கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன. ஓவர்-ஏகம் 4வீரர் போட்டி ஓவர்-கேம் 4வீரர் போட்டி வசந்-அப் போட்டி என மூன்று வகைகளாக நடாத்தப்பட்டு சாம்பியன்கள் தெரிவு செய்யப்படும். இறுதப்போட்டிகள் 28ம் திகதி புதன்கிழமை நடைபெறும். நீயமைதானத்தில் நடைபெறும் போட்டிகள் நொக்-அவுட் முறையில் நடாத்தப்படும்.

நாளை முதல் நாள் போட்டியை சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பீ சுகுணேந்திரன் தொடக்கி வைப்பார். 28ம் திகதி இடம்பெறும் இறுதிப்போட்டியிலும், பரிசளிப்பு வைபவத்திலும் எர்சட்டித்த ... திரு. ஏ ... பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கேடயங்களும், தொடர்ந்து இரண்டு இடங்களைப் பெறும் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பரிசளிக்கப்படுவதுடன் இறுதிப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரரும் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும் (ஈ)

## பொலிசில் புகார்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தபால் நிலையத்தில் ஒருவர் கலாட்டா செய்ததாக ஆனைக்கோட்டைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பாக்கியராசா என்பவர் தபால் நிலைய அதிபரைத் தகாத வார்த்தைகளால் ஏசியதாக அப்புகாரில் கூறப்பட்டுள்ளது. (க. அ)

## புது மடத்தில் உபதபால் நிலையம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்ப் பகுதியிலுள்ள புதுமடம் என்ற இடத்தில் புதிய உபதபால் நிலையம் வெகுவிரைவில் திறப்பதற்கு யாழ் பிராந்திய தபால் சேவை அத்தியட்சகர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மானிப்பாய் எம். பி. திரு. தர்மலிங்கத்தின் கோரிக்கையை அடுத்து நிறுவப்படவுள்ள இந்த உபதபால் நிலையம், மானிப்பாய் தபால் நிலையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

வெற்றி! வெற்றி! திரைப்பட வரலாற்றில் மகத்தான வெற்றி!
யாழ்-ஸ்ரீதர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
மக்கள் வெள்ளம் அலைபுரளும் 2வது மாதம்!



ஜெய்சங்கர், ராதிகா, அசோகன், நாகேஷ், ஜெயச்சந்திரன், தர்மலிங்கம், சிறி நடராசா, டிங்கிரி கனகரத்தினம், விஜயதீபன், கீதா, அஜேஜா, தர்மரெட்ணம், மற்றும் பலர் திறம்பட நடித்தது
பிறைட்டன் பிலிம்ஸ்
★ ரத்தத்தின் ரத்தமே ★
(ஈஸ்ட்மன்கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
பொம்மலாட்டம்
19-5-80 முதல்
குழந்தை உள்ளம்

லிடோ (யாழ்நகர்) போன் 7856
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-லதா
ஞானக்குழந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## ஆசிரியர் குறைபற்றி குழு ஆராயும்

(கொழும்பு) ஆசிரியர் பற்றாக்குறையை ஆசிரியர்களின் குறைபாடு நிவர்த்தி செய்யவே இந்நடவடிக்கைகள் பற்றி உத்தியோகத்தர் வடிக்கையைக் கடைப்பிடிப்பது குழு ஒன்று பாடசாலைகளுக்குச் சென்று நேரடியாக ஆராயும். என கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. (இ)




தேன் சிந்தும் ஐஸ்கிறீம்!
மறவாமல் வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள் பமிலி புளொக் ஐஸ்கிறீம்
நிக்கோ சுவீற்ஸ் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம். போன்: 464, 7889.
நிக்கோவுக்கு வேறு கிளைகள் இல்லை


# அபிவிருத்திசபைகள் ஏன் கொண்டுவரப்படுகின்றன?

## இரா. வாசுதேவா தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

“விஞ்ஞான சோஷலிசத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறும் தமிழ் கூட்டணி முதலாளித்துவத்தின் மேல் பூச்சான அபிவிருத்திச் சபைகளை ஏற்றுப் போயது மற்றும் அபிவிருத்திச் சபைக்கு கூட்டணி எடுத்த நடவடிக்கைகள் தமிழ்த் தலைமையின் வரலாற்று ரீதியான துரோக நடவடிக்கைகளின் மேலும் ஒரு கட்டமாகும்” என்று இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. இரா வாசுதேவா தெரிவித்துள்ளார்.

ஏழாலை பாரதி சனசமூக நிலையத்தில் இளைஞர் பேரவையின் வாராந்தக் கருத்தரங்கு “தமிழர் நிலை” என்ற தலைப்பில் திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது திரு. இரா வாசுதேவா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது ஏன் அபிவிருத்திச் சபைகள் கொண்டு வரப்படுகின்றன? தமிழ் மக்களின் சமாதானத்திற்கும் சாதகத்திற்குமல்ல முதலாளித்துவ அரசின் பொருளாதாரக் கொள்கையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு போராட்ட உணர்வுடன் செயலாற்றி வருகின்ற தென்னிலங்கை தொழிலாளி வர்க்கத்தை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து அவர்களின் போராட்டத்தை முறியடித்த பின்னர் தனிமையான தமிழ் மக்கள்மீது ஒடுக்கு முறையைப் பயன்படுத்தவே!

“ஆவரங்கால் மாநாட்டில் குடியேற்றம் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் தீர்க்க தரிசனமானதல்ல என்று நாம் கூறிய போதும் எடுக்கப்பட்ட முடிவை ஏற்று 100 தொண்டர்களை உடனடியாகக் குடியேற்ற ஒழுங்குகளை செய்யும் படி தலைமைப் பீடத்திற்கு எழுத்து மூலம் வேண்டுதல் விடுத்தும் பதில் இல்லை. எல்லைப்புற குடியேற்றத்தின் நிலை என்ன? எல்லைப்புறத்தில் குடியேறிய தமிழ்மக்கள் பொலிஸ் ராணுவத்தினால் அடித்து துரத்தப்பட்டனர் அங்கே திட்டமிடப்பட்ட குடியேற்றம் முடுக்கி விடப்பட்டது” என்றும் கூறினார்”.

இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. இறைகுமாரன் தமது உரையில் கூறியதாவது தமிழர் இளைஞர் பேரவை தேர்தலை முற்றாகப் பகிஷ்கரிக்கிறது 29-10-78 ல் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாக இளைஞர் பேரவை தீர்மானம் எடுத்த பின்னர் எமது அமைப்பை சிதைப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் எமது இயக்கத்தை மிகவும் பலவீனம் ஆக்கியுள்ளது. எமது இயக்கப் பத்திரிகையில் தேர்தல் ஒரு சாக்கடை என்றும் பாராளுமன்றப் பதவிகளை பந்து போல் உதைப்பேன் என்றும் செயலாளர் நாயகம் கூறியிருந்தார் ஆனால் இன்று கூட்டணி தவறான பாதையில் செல்கிறது. பாராளுமன்றம் தவறான பாதையிட்டுச் செல்லும் போது இயக்கத்திற்குள் போராடி தோல்வி அடைந்த நாம் கூட்டணிக்கு மக்கள் ஆணையை வழங்கிய தமிழ் மக்களாகிய உங்களிடமே கூட்டணியைச் சரியான பாதையில் இட்டுச் செல்லும் போராட்டத்தை ஆரம்பிக்க முடியும். மக்கள் ஆணையை வழங்கிய உங்களுக்குத் தட்டிக்கேட்க உரிமையில்லையா? என்று கூறினார். (சொ)


‘இயேசு கிறீஸ்து ஜீவிக்கிறார்’

ஆத்ம சரீர சுகமளிக்கும் அற்புத உயிர் மீட்சிக் கூட்டங்கள்

இடம்: யாழ் திறந்தவெளி அரங்கு மைதானம்
நேரம்: தினமும் மாலை 5-30 மணிக்கு
காலம்: மே 19 முதல் 25 வரை 1980

ஜீவிக்கிற இயேசு கிறீஸ்துவின் வல்லமையை வந்து பாருங்கள்.

* குருடர் காண்கிறார்கள்
* செவிடர் கேட்கிறார்கள்
* சப்பாணிகள் நடக்கிறார்கள்

நற்செய்தி அளிப்பவர்:
சங். M. பெர்ணண்டோ
யாவும் இலவசம்! யாவரும் வருக!!
5664


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஆதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News pa e at the General Post office Sri Lanka under N. CE/8948/ 78 The Eelanaadu, Post Box No 49, Telegram "Eelanaadu Phone: 389

### வீட்டுக்காரர் நித்திரையிலிருக்க

# ஜன்னல் உடைத்து

## ரூ. 30 ஆயிரம் நகை, புடவை கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

வீட்டின் பின்புறம் உள்ள ஜன்னலை உடைத்து வீட்டிற்குள் சென்ற திருடர் கோஷ்டி ஒன்று வீட்டில் இருந்த சுமார் முப்பது ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்ற துணிகரச் சம்பவம் ஒன்று முல்லைத்தீவில் நடைபெற்றது.

இக்கொள்ளை சம்பந்தமாக முல்லைத்தீவு சென் மேரீஸ் வீட்டைச் சேர்ந்த லாசறஸ் பிலிப்பையா என்பவர் முல்லைத்தீவுப் பொலிசில் புகார் செய்துள்ளார். அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளதாவது!

சம்பவதினம் இரவு வீட்டின் ஜன்னல்களையும் பூட்டிவிட்டுப் படுக்கைக்குப் போய் விட்டோம். மறுநாள் காலை நித்திரை விட்டு எழுந்து பார்த்த போது ஜன்னல் கம்பி உடைக்கப்பட்டிருந்தது. சந்தேகத்தின்மீது வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீட்டில்இருந்த அலுமாரியும் பெட்டிகளும் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த நகைகள், உடுபுடவைகள், கைக் கடிகாரங்கள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இக்கொள்ளை சம்பந்தமாக முல்லைத்தீவுப் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (சொ)

### யாழ். பஸ் நிலையத்தில்

# பஸ்ஸுக்கு காத்திருந்தவரை மற்றொரு பஸ் மோதியதாம்

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் வரிசையில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற பெண் ஒருவர் பஸ்ஸினால் மோதப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை யாழ் பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

விபத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள திருமதி சந்தனம் சிங்கம் (45 வயது) என்பவர் பொலிசாருக்களித்த வாக்கு வாக்குமூலத்தில் தான் கரவெட்டி மேற்கைச் சேர்ந்தவர் என்றும் சம்பவ தினம் மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து கரவெட்டிக்குச் செல்வதற்காக பருத்தித்துறை பஸ் கியூவில் பஸ்ஸிற்காக காத்துநின்றதாகவும் அப்போது அக்கியூவை நோக்கி ஒரு பஸ் பின்பக்கமாக வந்து கியூவில் நின்ற தம்மை மோதியதாகவும் தெரிவித்தார்.

இவ்விபத்து சம்பந்தமாக யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிசிரகுமார, கான்ஸ்டபிள் எட்மன் ஆகியோர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

பஸ் சாரதி சின்னத்தம்பி இராசரத்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். பஸ் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது

ஒரு வாரத்திற்குள் பருத்தித்துறை பஸ் கியூவில் நடைபெற்ற நாலாவது விபத்து இது என பொலிசார் தெரிவித்தனர். (கொ)

### யாழ். பல்கலைக் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தடவை கூட்டி மாணவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று கவுன்சில் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

நேற்றுக்காலை நடைபெற்ற உடயதாரகை நிலையத் திறப்பு விழாவில் யாழ் மாவட்ட அமைச்சருடன். யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன், யாழ் அஞ்சலக சிரேஷ்ட அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. சு. வித்தியானந்தன், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

(சொ-கோ-ச-இ

### உத்தியோகத்தர் தெரிவு இன்று

(வேலணை)

வேலணை கிழக்கு பயிற்செய்கை உத்தியோகத்தர் பிரிவில் நான்கு அங்கத்தவர்களுக்கான தெரிவு இன்று காலை வேலணை சமூக சேவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

### சந்தேக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி திரு. ரி. வே. என் திலகன் 2ம் சந்தேகநபரை 1000 ரூபா பிணையிலும் ஏனையோரை தலா 100 ரூபா பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

இவ்வழக்கில் சந்தேகநபர்களின் சார்பில் சட்டத்தரணி என் பரிகாந்தா ஆஜரானார். (இ)

### பாசிச எதிர்ப்பு வெற்றி விழா:

# ஜேர்மன் ஜ. கு. தூதுவர் கலந்துகொள்கிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜேர்மன் ஜனநாயக குடியரசு நட்புறவுச் சங்க யாழ் கிளை நடத்தும் பாசிசத்தை எதிர்த்து வெற்றி கொண்ட 35 வது ஆண்டு விழா இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

பிரதம விருந்தினராக இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜ. ஜ. நாயகக் குடியரசுத் தூதுவர் திரு. புறுனோமே தமது துணைவியாருடன் கலந்துகொள்வார் வட்டு எம். பி. திரு திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம், யாழ் மேயர் திரு. இராசா விசுவநாதன், திரு. மாவை சேனாதிராசா உட்பட பலர் சிறப்புரையாற்றுவார்கள்.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நாட்டார் வழக்கியல் பற்றிய ஆய்வு முன்னோடியாகத் திகழ்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் பற்றிய கருத்தரங்கு ஒன்றினை ஜூன் மாதத்தில் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

### வெளியீட்டுவிழா நாளை

(அரியாலை)

யாழ் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய ஆசிரியரும் கவிஞருமான யாழ். ஜெயம் திரு. ம விக்ரர் ஆசிரியர் எழுதிய “இதயவீணை” என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டுவிழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் ஆயர் அருட்பெரும் திரு வ தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறவிருக்கிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org